# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil ₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE REACHING NATIONS

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: SIS. SERENA BEVIN

Vol. XXVIII FEBRUARY 2023 No. 02

## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

நீதிமொழிகள் 3:26-35

26. கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார்.

27. நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.

28. உன்னிடத்தில் பொருள் இருக்கையில் உன் அயலானை நோக்கி: நீ போய்த் திரும்ப வா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே.

29. அச்சமின்றி உன்னிடத்தில் வாசம் பண்ணுகிற உன் அயலானுக்கு விரோதமாகத் தீங்கு நினையாதே.

30. ஒருவன் உனக்குத் தீங்கு செய்யாதிருக்க, காரணமின்றி அவனோடே வழக்காடாதே.

31. கொடுமையுள்ளவன்மேல் பொறாமை கொள்ளாதே; அவனுடைய வழிகளில் ஒன்றையும் தெரிந்து கொள்ளாதே.

32. மாறுபாடுள்ளவன் கர்த்தருக்கு அருவருப்பானவன்; நீதிமான்களோடே அவருடைய இரகசியம் இருக்கிறது.

33. துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கிறது, நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார்.

34. இகழ்வோரை அவர் இகழுகிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்.

35. ஞானவான்கள் கனத்தைச் சுதந்தரிப்பார்கள்; மதிகேடரோ கனவீனத்தை அடைவார்கள்.

# மிகப் பெரிய இரகசியம்!

[ போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் தலைமைச் சபையில் அளித்த செய்தி ]

**"இந்த இரகசியம் பெரியது; நான் இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்"** எபேசியர் 5:32.

தேவனுடைய சபை எனப்படுவது பரலோகத்தின் நிழலாட்டம் ஆகும். சபை என்பது பரிசுத்தவான்களின் ஐக்கியம் என்றும் கூறலாம். அப்போஸ்தலர் நடபடிகள் முதல் பத்து அதிகாரங்களின்படி, இயேசுவோடு இருந்து ஊழியம் செய்தவர்கள் சீஷர்கள் என்று அழைக்கப்பட்டனர். இயேசு அவர்களில் 12 பேரை தெரிந்துகொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார் (லூக்கா 6:13). அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு (இயேசுவை பின்பற்றியவர்களுக்கு – followers) கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கலாயிற்று (அப்போஸ்தலர் 11:26). மற்றவர்கள் இந்தக் கிறிஸ்தவர்களோடு சேர்ந்து பழகப் பயப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 5:13). உண்மைக் கிறிஸ்தவர்கள் பொய் சொல்லமாட்டார்கள். மற்றவர்களை வஞ்சிக்கமாட்டார்கள், பிறருக்குத் துரோகம் செய்யமாட்டார்கள், ஆண்டவருக்குப் பயந்து நடப்பார்கள். அவர்களிடம் மனம் திறந்துப் பேசலாம். நான் இவரைப்பற்றி இப்படி நினைத்தேனே, அவர் எனக்குத் துரோகம் பண்ணிவிட்டாரே என்று சொல்லி யாரைக் குறித்தாவது உண்மையாய் சொல்லக்கூடுமானால் அவர்கள் தேவனுடையப் பிள்ளைகள் அல்ல என்று அர்த்தம். யார் இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுகிறார்களோ, யார் அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கிறார்களோ அவர்கள்தான் தேவனுடையப் பிள்ளைகள்.



அழைப்பின் எதிரொலி!

கிறிஸ்தவ யூடியூப் சானல்! 5 நிமிட தேவ செய்திகள்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 5.00 மணிக்கு

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

# உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





## OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**CHIEF EDITOR**
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

**MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**
Bro. N. Prakasam, M.A., General Manager

**EDITORIAL BOARD**
Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.
Rev. Dr. K.R. Rajasekaran



**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858



**CORE LEADERS**
Bro. K. Puratchivendan
Bro. A. Edward Durai
Bro. A. Alvin
Bro. K. Abraham
Sis. Dhanalakshmi Chinnaiah



**E.mail ID**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call


*இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். — வெளிப்படுத்தல் 3:8.*

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்.

நமது **அழைப்பின் எதிரொலி பத்திரிகை, யூ டியூப் செய்திகள்** ஆகிய முயற்சிகள் மூலம் ஆசீர்வாதம் பெற்று வருவதற்காகக் கர்த்தரைத் துதிக்கிறோம். யூடியூப் ஊழியத்தில் என்னுடன் செயல்படுவதற்காக தேவன் தந்த என் அன்புப் பிள்ளைகள் போதகர் அலெக்ஸ் சாம்சன் சாம், போதகர் சின்னையா, சகோதர, சகோதரிகள் தனம் சின்னையா, மேரி மேக்தலின், என். பிரகாசம், கிறிஸ்டினா ஜெப குமாரி சின்னையா, பி. சரண், போதகர் வித்யாதர், ஆபிரகாம், சலோமி ஆபிரகாம், கீதா குருசாமி, டெய்சி ராணி, சாலமோன் ராபர்ட், ஜோஷ்வா ராபர்ட், எட்மாண்ட் தாமஸ் ஆகியோருக்காகக் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

எப்படியாயினும் சிலரை பாவத்தின் அகோரத்திலிருந்தும், சாபத்தின் பிடியிலிருந்தும் மீட்டு எடுக்கும்படியாக முயற்சிக்கிறோம். எங்களுக்கு உங்கள் ஜெபம் அதிகம் தேவைப்படுகிறது. ஊழியப்பாதை மிகவும் கடினம். எங்கள் சக்தியை மிஞ்சும் அளவுக்கு சத்துரு முயற்சிக்கிறான். ஆனால் தேவன்தான் எங்களை அரவணைத்துக் காப்பாற்றி வருகிறார்.

நாங்கள் உங்கள் கஷ்டங்களையும், பிரச்சினைகளையும் நன்குப் புரிந்து உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

நம்முடைய **நெகேமியா வேதாகமக் கல்லூரி**யின் பட்டமளிப்பு விழா கர்த்தருடைய கிருபையால் வருகிற ஜூன் 3–ம் தேதி நடைபெறும். அடுத்தக் கல்வியாண்டிற்கு தேவஅழைப்புப் பெற்ற மாணவர்கள் தேவை. இதற்காக ஜெபியுங்கள். மாணவர்களை எங்களுக்கு அறிமுகம் பண்ணுங்கள். வருமான நோக்கமின்றி, சுவிசேஷப் பிரபல்யத்தையே கண்முன் நிறுத்தி கடினமாக உழைக்கிறோம். நம்முடைய தமிழ் வேதாகமக் கல்லூரிக்காகவும், இந்தி வேதாகமக் கல்லூரிக்காகவும், பன்மொழி ஊழியங்களுக்காகவும் பாரத்துடன் ஜெபியுங்கள்.

நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். தேவ கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,


**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**
(+91) 98412 71858 / 98410 71858, மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com


இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர் எப்பொழுதும், எல்லாச் சூழ்நிலைகளிலும் இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பிரதிபலிப்பார்கள். சூழ்நிலைகளினாலே பாதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கவோ அல்லது தங்கள் சுய இலாபத்திற்காக தேவ ஊழியத்தைத் தவறாகப் பயன்படுத்த மாட்டார்கள்.

தேவனுடைய சபைக்கும், அதாவது தேவப் பிள்ளைகளின் ஐக்கியத்திற்கும், இயேசு கிறிஸ்துவுக்குமுள்ள உறவுதான் உலகத்திலே இருக்கிற இரகசியங்களிலே மிகப்பெரிய இரகசியம் ஆகும். இந்த இரகசியத்தைத்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து, சபைகள் மூலம் உலகத்தில் நிர்வாகம் பண்ணிக்கொண்டிருக்கிறார். தேவனால் பிறந்தவர்கள் தேவனுடையப் பிள்ளைகள். சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும் ஏழையாகவோ, பணக்காரராகவோ, செல்வந்தராகவோ, துன்பத்தின் பாதையில் கடந்து செல்பவர்களாகவோ இருக்கலாம்; வாழ்க்கையில் நம்பிக்கையிழந்து போனவர்களாக, கைவிடப்பட்டவர்களாக அல்லது யாருக்கும் இலாபமில்லாதவர்களாக இருக்கலாம். ஆனாலும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் தேவனால் பிறந்தவர்களே (யோவான் 1:13).


**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) · BIBLECOR - Postal Courses (3 languages) · Online Courses · Theological Correspondence Courses (2 languages) · Church Planting · Nehemiah Bible Colleges · Gospel Printing Press · Great Commission Partners · St. Paul's Matriculation School · Crusades · Community Development

சபைக்கும், தேவனுக்கும் உள்ள இரகசிய உறவில், உலகத்திலே மனிதன் வெற்றி வாழ்க்கை வாழ்வதற்குரிய சகல உண்மைகளும் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இதை மீறி, வேறு வழிகளில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் தேடி வாழ்க்கையின் முன்னேற்றத்துக்காக மனிதர்கள் வழியை வகுத்துக் கொள்ளுகின்றனர். எத்தனையோ இரகசியங்கள் வேதாகமத்தில் எழுதப்பட்டிருந்தாலும், இயேசு கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்குமுள்ள மிகப்பெரிய இரகசியத்தை நாம் பயன்படுத்தும்போது, நம் வாழ்க்கையில் மாற்றங்களும், உயர்வுகளும் ஏற்படும்.

உலக இரட்சகர் இயேசு கிறிஸ்துவையும், அவருடைய சபையையும் குறித்த உண்மைகள் காலத்தாலும், கலாச்சாரத்தாலும், சூழ்நிலைகளாலும், நூதன தொழில் நுட்பங்களாலும் மாற்றக்கூடாதவை. ஏதோ குறிப்பிட்ட தவறான கருத்துக் கணிப்புகளாலும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சரியான அறிவு இல்லாத காரணத்தாலும் கிறிஸ்தவம் வேண்டாம் என்றும் கிறிஸ்தவத்தைத் தழுவ வேண்டாம் என்றும் கூறப்படலாம். ஆனால் இக்கருத்து முற்றிலும் தவறானது. இயேசு கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றினதால், இந்த உலகத்தில் யார் கெட்டுப்போனார்கள்? யார் தரித்திரர் ஆனார்கள்? யார் பிறருக்கு ஏதாவது ஒரு விதத்தில் உபத்திரவம் கொடுத்தார்கள்? யாருமே இக்கேள்விகளுக்கு 'ஆம்' என பதிலளிக்கவே முடியாது. **நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை.** சங்கீதம் 37:25.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பும், புது வருட பிறப்பும் கிறிஸ்தவர்களால் மட்டுமல்ல, அனைத்து தேசத்தாராலும், அனைத்து மதத்தினராலும் அனுசரிக்கப்படுகின்றன. ஜனவரி மாதம் முதல் தேதியன்று எல்லா மதக்கோயில்களிலும் விசேஷ வழிபாடுகளும், தொழுகைகளும் நடத்தப்படுகின்றன. ஏன்? உண்மை உண்மைதான். உண்மையை அதிக காலம் மறைக்கவோ, மறுக்கவோ, முடியாதது. உலகச் சரித்திரத்தையே கி.மு. என்றும் கி.பி. என்றும் இரண்டாகப் பிரித்தது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பே. இந்த உலகம் வழிதப்பிப் போனதினால் இந்த உலகத்தைப் படைத்த ஆண்டவர் மானிட உருவமெடுத்து இயேசு கிறிஸ்துவாக இந்த உலகத்தில் பிறந்து, மரித்து, உயிர்த்தெழுந்ததின் மூலம் அவர் நம்மேல் வைத்த பேரன்பை வெளிப்படுத்தினார் (ரோமர் 5:8). இந்த உலகத்தில் பிறந்த எல்லாருடைய சரீரங்களும் அடக்கம் பண்ணப்பட்ட கல்லறைகளுக்குள் மூடியிருக்க, இயேசு கிறிஸ்துவின் கல்லறை மாத்திரம் இன்றும் திறந்திருக்கிறது ஏன்? அவர்தான் மரணத்தை வென்று, உயிர்த்தெழுந்த உலக இரட்சகராகிய ஆண்டவர்.

இயேசு கிறிஸ்துவின் சபையை வெறுக்கலாம் அல்லது சபையை உபத்திரவம் செய்ய முயற்சிக்கலாம். ஆனால் தேவனுடைய சபை மனிதர்களுடைய கட்டுப்பாட்டில் உள்ளது அல்ல. அது பரலோகத்தின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் செயல்படுவதாகும். உலக தோற்றம் முதலே இந்த நீதிமான்களின் கூட்டாய்மையான சபையானது பயங்கரமான துன்பங்களையும், எதிர்ப்புகளையும் சந்தித்து வந்துள்ளது. ஆனால் யாராலும் தேவனுடைய சபையைக் கட்டுப்படுத்த முடியாது. அதைக் கட்டுப்படுத்த முயன்ற நாடுகளும், அதிகாரங்களும் பெயர் கூட சொல்லப்படக்கூடாமல் உடைந்து, நொறுங்கிப் போனதாக சரித்திரம் உள்ளது. ஆகவே நாம் மிகவும் ஞானமாக சத்தியத்தை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். தேவ சபையின் மகிமையை அறியாதவர்களுக்குத் தேவ அறிவு வந்துவிட்டால் மனத்தெளிவு வந்துவிடும். அகில உலக அளவில் இன்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தினந்தோறும் இயேசு கிறிஸ்துவின் சபையில் புதிதாகச் சேர்க்கப்பட்டு வருகின்றனர். எண்ணற்ற சபைகளும் தினந்தோறும் உருவாகி வருகின்றன.

## I. என் சபையை நான் கட்டுவேன்!

**பின்பு, இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி: "மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்" என்று கேட்டார். அதற்கு அவர்கள்: "சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்" என்றார்கள்.**

**அப்பொழுது அவர்: "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்" என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றான்.**

**இயேசு அவனை நோக்கி: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை"** என்றார். மத்தேயு 16:13–18.

இங்கே ஆண்டவர் சீமோன் பேதுருவினிடம், மற்றவர்கள் அவரைப்பற்றி என்னச் சொல்லுகிறார்கள் என்று கேட்கிறார். இயேசு கிறிஸ்துவுக்கும் அது பற்றி ஒரு எண்ணம் இருந்தது. நம்மைக் குறித்து உலகம் என்ன சொல்லுகிறது என்பதையும் பிறர் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்பதையும் ஒவ்வொரு ஆவிக்குரிய மக்களும் அறிந்துக் கொள்ள வேண்டும். "என்னைப் பற்றி யார் என்ன சொன்னால் எனக்கென்ன? நான் என் மனசாட்சியின்படி நடக்கிறேன்" என்று சொல்லக்கூடாது. இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றி மக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்டபோது, சீமோன் பேதுரு, "**நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து**" என்று, தான் பெற்றுக்கொண்ட வெளிப்பாட்டைச் சொல்லுகிறார். இயேசு கிறிஸ்து அவரிடம், "மாம்சமும் இரத்தமும் இதை வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற தம்முடைய பிதாவே இதை அவருக்கு வெளிப்படுத்தினார்" என்று சொன்னார். இன்றைக்கும் தேவமக்களைப் பார்த்து இவர்கள் பைத்தியக்காரர்கள், அறிவீனர்கள், ஞானமற்றவர்கள், ஜனங்களை மாற்றுகிறவர்கள்" என்று சிலர் சொல்லுகிறார்கள். ஒருவர் இயேசு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டால், "மாம்சமும் இரத்தமும் அதை அவர்களுக்கு வெளிப்படுத்தவில்லை என்றும் பரலோகத்திலிருக்கிற ஆண்டவர் தான் அவர்களுக்கு சத்தியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்" என்றும் அர்த்தம்.

இயேசு கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொண்டவர்கள் ஒவ்வொருவரும், பரலோகத்தின் வெளிப்பாட்டைப் பெற்றவர்கள். ஒரு காலத்தில் அவர்கள் எப்படியிருந்தாலும், இப்போது அவர்கள் வெளிப்பாட்டைப் பெற்றவர்களே. அவர்கள் உன்னதமான ஆண்டவருக்குச் சொந்தமானவர்கள்.

ஆண்டவர் என்னிடம் பேசவில்லை என்றோ நான் ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்கவில்லை என்றோ ஆண்டவருக்கும் எனக்கும் உறவில்லை என்றோ நீங்கள் சொல்ல முடியாது. ஏனென்றால் சீமோன் பேதுருவிடம் ஆண்டவர் "நான் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்பதை நீ இப்போது அறிக்கையிட்டாய் அல்லவா? இதை மாம்சமும், இரத்தமும் உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா உனக்கு இதை வெளிப்படுத்தியிருக்கிறார்" என்றார். அப்படியானால் பரலோகத்தின் வெளிப்பாட்டைப்பெற்றதினால்தான் நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள். இயேசு கிறிஸ்து மெய்யான

தெய்வம். இயேசு கிறிஸ்து எல்லாத் தெய்வங்களுக்கும் மேலானவர். இயேசு கிறிஸ்துதான் உலகத்தில் உயர்ந்தவர் என்பதுதான் தெய்வீக வெளிப்பாடு (divine revelation). பரலோகத்திலிருக்கிற ஆண்டவர் தம்மை வெளிப்படுத்தாவிட்டால், யாருடைய முயற்சியாலும், கட்டாயத்தாலும் இயேசு கிறிஸ்துவை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இப்படியாக பரலோகத்தின் ஆண்டவருடைய வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்த உலக வாழ்க்கையிலிருந்து பிரிந்து வாழ வேண்டும். வித்தியாசப்பட்ட ஒரு வாழ்க்கை வாழ வேண்டும்.

உலக மக்கள் ஒரு பக்கத்திலே தங்கள் வாழ்க்கையை முன்னேற்றிக் கொள்ள பல வழிகளில் முயற்சிக்கும்போது, ஓர் இரகசியத்தை அவருடைய பிள்ளைகளுக்கு மாத்திரம் – பரலோகத்திலிருந்து வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு மாத்திரம் இந்தக் காரியத்தை இப்படி இப்படி செய்தால், நீங்கள் வாழ்க்கையிலே வளம் பெறுவீர்கள் என்று ஓர் உன்னதமான வழியை வேதம் கற்பிக்கிறது.

## 2. என் சபை!

உலகத்தில் எல்லா வேலைகளையும் எல்லாரும் செய்யலாம். ஆனால் சபையைக் கட்டுகிற வேலையை மாத்திரம் ஒரு மனிதன் நினைத்ததும் செய்ய முடியாது. சபையைக் கட்டுகிற வேலையை மாத்திரம் ஆண்டவர் தம்முடைய கைகளிலே வைத்திருக்கிறார். “என் சபையை நான் கட்டுவேன்” என்றார் இயேசு கிறிஸ்து. என் சபையை என் ஊழியக்காரர் கட்டுவார் என்று சொல்லவில்லை. பேதுருவே நீ கட்டுவாய் என்று சொல்லவில்லை. “... **என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை** என்றார். மத்தேயு 16:18.

தேவனுடைய பிள்ளைகளின் கூட்டம்தான் தேவனுடைய சபை என்று அழைக்கப்படுகிறது. ஜனங்கள் கூடி வரும் இடத்தைத்தான், சபை என்று வேதம் சொல்லுகிறது. சபை என்று சொல்வது ஒரு கட்டிடம் அல்ல. என்னுடைய சபையிலே இன்றைக்கு ஆராதனை நடக்கும் என்று சொல்லும் வேளையிலே அது கட்டிடத்தைக் குறிப்பது அல்ல, அது தேவனுடைய பிள்ளைகள் கூடியிருக்கிற கூட்டத்தைத்தான் குறிப்பிடுகிறது. தேவனுடைய சபையைத் தேவனே கட்டுவார். தேவனுடைய சபை என்று சொல்லும்போது நீங்களும் சேர்ந்ததுதான் சபை. தேவ மக்களாகிய உங்களை நான் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் உங்களை மேற்கொள்ள முடியாது. இந்த தேவனுடைய சபையை நாம் அங்கீகரிக்கும்போது, தேவனுடைய சபைக்கு நம்முடைய வாழ்க்கையில் முக்கியத்துவம் தர வேண்டும். என் சபையின் மக்களாகிய உங்களை நான் கட்டுவேன்: நான் என்னுடைய ஜனங்களை செழிப்பாக்குவேன்: பாதாளத்தின் வாசல்கள் உங்களை மேற்கொள்ள முடியாது; இந்த உத்தரவாதங்களை ஆண்டவர் தம் கையில் வைத்துள்ளார். சாபங்களும் அந்தகாரத்தின் ஆதிக்கங்களும் உங்களை மேற்கொள்ள முடியாது. வியாதிகள், துன்பங்கள், பாடுகள் உபத்திரவத்தின் வழியாகச் சென்று வாழ்க்கையின் துன்பப்பாதையிலே கடந்துச் செல்கிற உங்களைப் பார்த்து என் சபையாகிய உங்களை நான் கட்டுவேன்.

வியாதி, துன்பம், கடன்தொல்லை, வறுமை, பிசாசின் பிடியாகிய பாதாளத்தின் திட்டங்கள் உங்களை மேற்கொள்ளமுடியாது. ஏனென்றால் நீங்கள்தான் என்னுடைய சபை. நான் தேவன் என்பதை மாம்சமும், இரத்தமும் உங்களுக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகம்தான் உங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறது. பரலோகத்தின் வெளிப்பாட்டைப் பெற்றவர்கள்தான் தேவனுடைய பிள்ளைகள். யார் யார் பரலோகத்தின் வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டார்களோ அவர்கள்தான் தேவனுடைய சபையிலே சேர்க்கப்படுகிறார்கள். யார் யார் தேவனுடைய சபைகளிலே சேர்க்கப்படுகிறார்களோ அவர்களைத் தேவன் கீழேத் தள்ளுவதில்லை. அவர்களைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக்கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஆண்டவர் ஒப்பிடுகிறார். ஒருவன் மணலின்மேல் தன் வீட்டைக் கட்டுகிறான். காற்றடிக்கிறது. பெருமழை சொரிகிறது. தண்ணீர் வரும்போது அந்த வீடு கரைந்து போகிறது. ஆனால் இன்னொருவன் தன் வீட்டைக் கன்மலையின்மேல் கட்டுகிறான். அவனுக்கும் காற்றடிக்கிறது. பெருமழை சொரிகிறது. தண்ணீர் வருகிறது. வியாதி வருகிறது. கஷ்டம் வருகிறது. தோல்வி வருகிறது. எல்லாராலும் கைவிடப்பட்டு குற்றவாளிக் கூண்டிலே நிற்கிற நிலைமை வருகிறது. ஆனால் அவனுடைய வீடு விழுந்து போகாது. அவனும் ஸ்திரமாக நிற்பான். என் சபையாகிய உங்களை நான் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் உங்களை மேற்கொள்வதில்லை. நான் கன்மலையின்மேல் வீட்டைக்கட்டுகிற ஒரு புத்தியுள்ள மனுஷனுக்கு உங்களை ஒப்பிடுவேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

தேவ சபையிலே இருக்கும்போதுதான் ஜெயம் உண்டாகிறது. சபை கூடி வருதலை நீங்கள் விட்டுவிடக் கூடாது. இன்று அநேகருக்கு தேவனுடைய சபைக்கு வருவது ஒரு கடினமான வேலையாகத் தென்படுகிறது. தூரமாய் இருக்கிறது, சோர்வாயிருக்கிறது, போக்குவரத்து வசதியில்லை – இப்படிப் பல்வேறு காரணங்களைக் கூறி ஜனங்கள் தேவனுடைய ஆலயத்திலே போய் தேவனை ஆராதிக்கிற ஆசீர்வாதத்தை இழந்துப் போகிறார்கள். சபைக்குச் சென்று ஆராதிக்கிற விஷயத்தில் நீங்கள் கருத்தாயிருந்தால் இயேசு கிறிஸ்துவின் சபையாகிய உங்களை உலகத்திலுள்ள எந்தக் காரியமும் மேற்கொள்ளமுடியாது. நீங்கள் ஜெயம் பெறுவீர்கள்.

தேவனுடைய சபையிலே அங்கத்தினராக இருப்பவர்களும், அவருடைய சபையிலே பங்குபெறுகிற பரிசுத்தவான்களும் இயேசுகிறிஸ்துவைத்

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....

**நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.**

வேளச்சேரி – முழுநேரம் – இந்தி
சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்
(திங்கள், செவ்வாய், வியாழன்)

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Theology : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்

கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2023 பிப்ரவரி 19 முதல் மார்ச் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

- **பிப்ரவரி 19** ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் அனைத்து தீய சக்திகளிடமிருந்து பாதுகாத்து வருகிறதற்காக ...
- **பிப்ரவரி 20** ⇨ இளம்பிராயத்தினரை உற்சாகத்தினால் நிரப்பி அனைத்து சபை நடவடிக்கைகளிலும் பங்கேற்க செய்த கிருபைக்காக ...
- **பிப்ரவரி 21** ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...
- **பிப்ரவரி 22** ⇨ அற்புதமான ஊடக குழுவினரின் மூலம் **அழைப்பின் எதிரொலி** யூ டியூப் சானல் தங்கு தடையின்றி ஒளிபரப்பி வருகின்ற கிருபைக்காக ...
- **பிப்ரவரி 23** ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** யூ டியூப் சானலுக்காக விசேஷ காமிராவை வாங்க செய்த கிருபைக்காக ...
- **பிப்ரவரி 24** ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்–தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக...
- **பிப்ரவரி 25** ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர்கள் நல்ல உடல்நலத்துடனும் தேவபாதுகாப்புடனும் இருப்பதற்காக ...
- **பிப்ரவரி 26** ⇨ நமது பங்காளர்களின் உறுதுணை மற்றும் பொருளாதார ஆதரவிற்காக ...
- **பிப்ரவரி 27** ⇨ **அழைப்பின் எதிரொலி யூடியூப் சேனல்** மற்றும் **ஊடக ஊழியம்** மூலமாக சந்திக்காத பன்மொழி மக்களை சந்திக்க வைத்த கிருபைக்காக ...
- **பிப்ரவரி 28** ⇨ நமது மாதாந்திர காலண்டர், அட்டவணைக் காலண்டர் மற்றும் வாக்குத்தத்தஅட்டையின் அச்சுப்பணிகள் மற்றும் தபால் பணிகள் சிறப்புடன் நிறைவடைந்ததற்காக ...
- **மார்ச் 01** ⇨ நமது சபை ஊழியப்பணிகள் மேலும் ஒழுங்கமைக்கப்பட்ட கிருபைக்காக...
- **மார்ச் 02** ⇨ நமது முழுநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மாணவர்களுக்கு இசைப்பயிற்சி வகுப்புகளை நடத்த வைக்கின்ற கிருபைக்காக ...
- **மார்ச் 03** ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரிகளில்** நடைபெற்ற கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட சிறப்பு நிகழ்ச்சிகளை கர்த்தர் ஆசீர்வதித்ததற்காக ...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

- **மார்ச் 04** ⇨ 2023–24ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...
- **மார்ச் 05** ⇨ 2023–24ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...
- **மார்ச் 06** ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய சக்திகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க ...
- **மார்ச் 07** ⇨ உலக தேசங்கள் அனைத்தும் கோவிட்–ன் புதுவகையான தொற்று நோயின் தாக்குதலிலிருந்து தேவ பாதுகாப்புடன் திகழ ...
- **மார்ச் 08** ⇨ நமது அச்சக பணியாளர்கள், வாகன ஓட்டுனர்கள், கணினி ஆப்ரேட்டர்கள் போன்ற தொழில்நுட்ப பணியாளர்களுக்காக ...
- **மார்ச் 09** ⇨ உலக நாடுகளிலுள்ள பிள்ளைகள் மற்றும் இளவயதினர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தமது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டி ...
- **மார்ச் 10** ⇨ கிறிஸ்தவ போதகர்கள் கள்ள உபதேசம் செய்யாமல் வேதாகம முறைப்படி பிரசங்கிக்க ...
- **மார்ச் 11** ⇨ சிறைகளில் ஊழியம் செய்பவர்களுக்காக ...
- **மார்ச் 12** ⇨ உலக நாடுகளிலுள்ள பிள்ளைகள் மற்றும் இளவயதினர் இணையதள விளையாட்டுகளின் அடிமைத்தனத்திலிருந்து பாதுகாக்கப்பட வேண்டி ...
- **மார்ச் 13** ⇨ நமது **அழைப்பின் எதிரொலி யூடியூப் சேனலில்** தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் நற்செய்தி இதர மொழிகளில் ஒளிப்பரப்பாக வேண்டி...
- **மார்ச் 14** ⇨ **நெகேமியா வேதாகமக்கல்லூரி**யின் கற்பித்தல் மற்றும் மொழிபெயர்ப்பு ஊழியங்களில் ஈடுபட்டுள்ள சகஊழியர்களுக்காக ...
- **மார்ச் 15** ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காகவும்...
- **மார்ச் 16** ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு நிறைவாய் நிகழ்ந்திட ...
- **மார்ச் 17** ⇨ இஸ்ரேல், ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளில் சமாதானம் பரவ ...
- **மார்ச் 18** ⇨ முதியோர் இல்லங்களில் உள்ள வயதானவர்களுக்காக ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள். இவர்கள்தான் உயர்ந்தவர்கள். அவர்களை அழிப்பதற்கு இந்த உலகத்தில் எந்த ஒரு சக்தியும் கிடையாது. இன்று உங்கள் வாழ்க்கையிலிருக்கிற தோல்விகள் உங்களுக்கு நன்மையாக மாறும். ஏனென்றால் நீங்கள் சபையிலிருக்கிறீர்கள். சபை என்று சொல்வது பரலோகத்தின் பணித்தளம். பரலோகத்திலிருக்கிற அதிகாரத்தை இந்த பூவுலகத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு வைக்கப்பட்டிருக்கிற பணித்தளம்தான் சபை. இந்த சபைகளின் மூலமாகத்தான் தேவன் தேசங்களை ஆசீர்வதிக்கிறார்.

இதை உலகமக்களிடத்தில் போய்ச் சொல்லிக் கொண்டிருந்தால், புரியாது, யாருக்கும் தெரியாது. படிக்காதவர்கள், ஏழைகள், கஷ்டப்படுகிறவர்கள் இவர்கள்தான் கிறிஸ்தவத்தில் போய் சேருகிறார்கள். அவர்கள்தான் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களா? என்று கேட்டால், ஆம்! அதுதான் உண்மை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் இந்த உலகத்திற்குச் சொந்தமானவர்கள் அல்ல. அவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள். பரலோகம் அவர்களுக்குப் பாதுகாப்பைக் கொடுக்கிறது.

நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டத் துன்பங்கள், பாடுகள் இவற்றை நினைத்து, "எல்லோருக்கும் வருகிற கஷ்டம் தானே கிறிஸ்தவர்களுக்கும் வருகிறது. நான் நீண்ட நாட்களாக விசுவாசியாயிருக்கிறேன். பக்கத்து வீட்டுக்காரனுக்கு வருகிற பிரச்சினையைக் காட்டிலும், எனக்கு வருகிற பிரச்சினைப் பெரியதாயிருக்கிறது" என்று கூறி உங்கள் பிரச்சினையைக் குறித்த கவலையோடுகூட இருக்கலாம். ஆலயத்திற்குப் போய் என்ன இலாபம்? ஊழியம் செய்து என்ன இலாபம்? என் வாழ்க்கையில் முன்னேற்றம் இல்லையே, என்னுடைய வாழ்க்கையில் செழிப்பில்லையே! நான் தோல்வியுற்றுத் துவண்டுக்கிடக்கிறேனே! என்னைத் தூக்கி நிறுத்துவாரில்லையே! எனக்கு ஆதரவு இல்லையே! இவ்வளவு பெரிய சிக்கலிலிருக்கிற என்னை, "நான் உன்னை நேசிக்கிறேன்" என்று சொல்வதற்கு உலகத்தில் யாரும் இல்லையே" என்று நீங்கள் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையைக் குறித்துக் கவலைப்படலாம். இயேசு கிறிஸ்துவின் சபையாகிய உங்களை இந்தப் பாதாளத்தின் வாசல்களும், இந்த உலகத்தின் நெருக்கங்களும் ஒரு போதும் மேற்கொள்ள முடியாது. மணலின்மேல் வீடு கட்டினாலும், கன்மலையின்மேல் வீடு கட்டினாலும் மழை வரத்தான் செய்யும், புயலடிக்கத்தான் செய்யும், பெருமழை அடிக்கத்தான் செய்யும். தண்ணீர் வரத்தான் செய்யும். ஆனால் மணலின்மேல் கட்டுகிறவனுடைய வீடு அழிந்துப்போகும். கன்மலையின்மேல் கட்டுகிறவனுடைய வீடு நிற்கும். மணலின்மேல் கட்டுகிறவன் புத்தியற்றவன். கன்மலையின்மேல் கட்டுகிறவன் புத்தியுள்ளவன். ஆகவே மற்றவர்களுக்கு வருகிற மழையும், நெருக்கமும், சோதனையும் உங்களுக்கு வந்தாலும், மற்றவர்களுக்கு அது அழிவை உண்டாக்கும். ஆனால் உங்களுக்கு அது ஆசீர்வாதத்தைக் கொடுக்கும்.

## 3. ஆலயத்தில் நாட்டப்பட்டவர்கள் செழிப்பார்கள்!

**கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள்.** சங்கீதம் 92:13. தேவனுடைய பிள்ளைகள் செழித்திருப்பார்கள். நீங்கள் செழிப்பாக வேண்டுமென்பது தேவனுடைய திட்டம். ஒரு செயற்கைச் செடியைத் தொட்டியிலிருந்து எடுத்துவிட்டு, மறுபடியும் அந்த தொட்டியிலேயே வைத்து விடலாம். இதற்கு தண்ணீர் ஊற்றத்தேவையில்லை. தேவனுடையச்சபையிலே நாட்டப்பட்டவர்கள் இவ்விதமாக தற்காலிகமாக வைக்கப்பட்டவர்கள் அல்ல. இயற்கையாகவே ஒரு செடி மண்ணிலே நடப்பட்டு, அது தண்ணீர் ஊற்றப்பட்டு எப்படி கனிகொடுக்கிறதோ அப்படிப்பட்ட வாழ்க்கையையுடையவர்கள்தான் உண்மையாய்ச் செழித்திருப்பார்கள்.

தேவனுடைய ஆலயத்திலே நாட்டப்பட்டு, தேவனுடைய சபையிலே தண்ணீர் ஊற்றப்பட்டு, உரம் போடப்பட்டு, தேவ சபையிலே வேரூன்றி, தேவ சபையிலே செழித்து வளர்ந்து, தேவ சபையிலே கனி கொடுக்க வேண்டும்.

யார், யார் தேவனுடைய சபையிலே, உண்மையான ஈடுபாடு கொண்டு ஊழியம் செய்து, போதகருக்கு உதவி செய்து சபையிலே கனி கொடுக்கிறார்களோ அவர்கள் செழித்திருப்பார்கள். இன்று அப்படி கனிகொடுக்க அநேக மக்களுக்கு விருப்பமில்லை. சிலர் இரட்சிக்கப்பட்டேன், ஞானஸ்நானம் எடுத்து விட்டேன் என்ற நிலைமைக்கு வந்துவிட்டால், உடனே தங்கள் சபையைவிட்டு வெளியேறவும், தங்களுக்காக ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கவும், ஆண்டவர் சொல்லாதக் காரியங்களை ஆரம்பிக்கவும், இறுதியில் பல சிக்கல்களில் மாட்டி தங்களின் அழைப்பையே இழந்துப் போகும் நிலைக்கு வந்து விடுகின்றனர். தேவனுடைய ஆலயத்திலே, தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கிற உத்தரவாதத்தையும், தரிசனத்தையும், தொழிலையும், பொறுப்பையும் நீங்கள் உண்மையாய் செயல்படுத்தும்போது நீங்கள் செழித்திருப்பீர்கள். சிலர் கோயிலுக்குச் சென்றால் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து விடுமா? என்று கேட்பார்கள். ஆம்! தீர்ந்து விடும், சாதாரண மக்களிடத்தில் சொன்னால் அவர்களுக்கு இது புரியாது. நான் சிறுவனாயிருக்கும்போது, ஒரு வயதான போதகருடைய செருப்பைத் துடைத்து அவருக்கு உதவி செய்கிற ஒரு சிறு ஊழியத்தைச் செய்ததினால், ஆண்டவர் என்னை இந்த கனமான ஊழியத்திற்கு கொண்டு வந்தார். நீங்கள் உங்கள் ஆலயத்திலே நாட்டப்பட்டிருக்கிறீர்களா? அல்லது சொருகப்பட்டிருக்கிறீர்களா? இன்றும் பலர் சபையிலே நாட்டப்பட்ட விசுவாசிகளாயிராமல், பார்வையாளராகவே (visitors) இருக்கிறார்கள். நாட்டப்பட்டச் செடி கனி கொடுக்கிறது. அநேகருடைய வாழ்க்கை கனி கொடுக்காத வாழ்க்கை. விசுவாசிகள் என்று நாம் சொல்லிக் கொள்கிறோம். வாழ்க்கையில் வெற்றியில்லை என்றும் சொல்லிக் கொள்கிறோம். தேவனுடைய ஆலயத்திலே எவ்வளவு ஈடுபாடு கொள்கிறீர்களோ அந்த அளவுக்கு தேவனுடைய ஆலயத்தில் ஊன்றிக்கட்டப்பட்டு, எந்த அளவுக்கு தேவனுடைய ஆலயத்தில் கனி கொடுக்கிறீர்களோ அந்த அளவுக்கு ஆண்டவர் உங்களுக்குச் செழிப்பைக் கொடுப்பார்.

பிரபல மறைந்த போதகர் பாஸ்டர் ஜி. சுந்தரம் அவர்கள், சுயாதீன ஊழியர் என்ற பெயரில் ஊழியம் செய்கிறவர்களைப் பார்த்து, "நீங்கள் எப்படியும், எங்கு சென்றும் ஊழியம் செய்யுங்கள். ஆனால் உங்கள் இடுப்பில் ஒரு கயிற்றைக் கட்டி அதன் மறு முனையை சபையிலே இறுகக் கட்டிக்கொள்ள வேண்டும். உங்கள் சொந்த சபையை முக்கியத்துவப்படுத்த வேண்டும். அங்கிருந்துதான் உங்களுக்கு சக்தி கிடைக்கும். இல்லாவிட்டால் ஆவிக்குரிய அனாதைகள் ஆகி விடுவீர்கள்" என்று அடிக்கடி சவால்விட்டுச் சொல்வார்கள். இது எத்தனை உண்மை! இந்தச் செய்தியை எழுதும் நானும், ஒரு சபைக்கும் என் தலைமை போதகர்களுக்கும் கீழ்ப்பட்டுத்தான் இன்றும் இருக்கிறேன். நான் ஆசீர்வாதமாயிருக்கிறேன். எனக்கும் அநேக உதவி ஊழியர்களைத் தேவன் கிருபையாய்த் தந்துள்ளார். நான் சந்தோஷமாயிருக்கிறேன். உங்கள் நிலை என்ன?

## 4. கர்த்தருடைய மகிழ்ச்சியின் நாள்!

**என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள**

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
3. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒரியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகன்.
4. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (இரு இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம்
5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை – ஞாயிறு காலை 8.30 மணி மாலை 4.00 மணி
13. தமிழ் ஆராதனைகள் – ஞாயிறு காலை 8.00 மணி & 10.00 மணி
14. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
15. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
17. போதகர் ஆலோசனைக் கூட்டம் – ஞாயிறு மாலை 4.00 மணி
18. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
19. இறையியல் கல்வி – புதன் மாலை 6.30 மணி
20. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
21. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
22. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
23. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
24. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 5.30 மணி
25. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி
26. இரவு ஜெபம் – 2–ம் வெள்ளி இரவு 9.30 மணி
27. உபவாச ஜெபம் – மூன்றாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
28. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
29. அதிகாலை ஜெபம் – தினமும் காலை 5.00 மணி
30. ஊழியர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
31. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

# அழைப்பின் எதிரொலி
## தபால் வழிக் கல்வி
### இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி
### பத்திரிகையை

**இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு**

உங்கள் உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

## எனது பணித்தள ஊழியம்!

திறந்த வெளி மைதானங்களிலும், வீடுகளிலும் கர்த்தருடைய சுவிசேஷத்தைப் பரப்பவும், சுவிசேஷக் கூட்டங்கள் நடத்தவும் கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு நல்ல நண்பர்களை உதவியாகக் கொடுத்தார். இத்தகைய ஊழியங்களில், D. ரிச்சர்ட் தம்பிராஜ், வில்லியம், செல்வராஜ், பிஜிலி சாம்ராஜ், P. சந்திரசேகர், திருமதி. J.V. செல்வன், சாம் புஷ்பராஜ் ஆகியோர் எனக்கு உதவியாக இருந்தார்கள்.

நாங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையிலுள்ள நாவலர் நகர் என்ற இடத்தில் திறந்த வெளி கூட்டங்களை நான் நடத்தியபோது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையால் மக்கள் தொடப்பட்டு, பிசாசினால் பாதிக்கப்பட்டவர்களும், வியாதியஸ்தர் களும் சுகமடைந்து விடுதலையாக்கப்பட்டனர். இவ்வாறாகக் கர்த்தருடைய அபிஷேகம் கிரியை செய்ய ஆரம்பித்தது.


அந்தப் பகுதியிலுள்ள ஏழைகள், பணக்காரர்கள், படித்தவர்கள், படிக்காதவர்கள் என்று பலரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். அநேக அற்புதங்கள் நடந்தன. 'அக்கார்டியன்' (Accordion) என்ற இசைக் கருவியை நான் வாசித்து, பாடி, சிறு பிள்ளைகளுக்கான நிகழ்ச்சிகளை நடத்தி வந்தேன். அதனால், ஜீவனுள்ள தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியனாக தேவன் என்னை உயர்த்தினார்.

எனது கூட்டங்களில் உண்மையான அற்புதங்கள் நடந்ததையும், மக்களின் வாழ்க்கை முறைகள் மாறுவதையும் கண்ட மக்கள், என்னை மதிக்கத் தொடங்கி, எனது ஜெபக் கூட்டங்களில் கலந்து கொள்ளத் தொடங்கினார்கள். வேறு சபைகளுக்குச் செல்லுகிற கிறிஸ்தவர்களையோ அல்லது ரோமன் கத்தோலிக்கர்களையோ, பிராட்டஸ்டன்ட் சபை மக்களையோ என் சபையில் ஏற்றுக்கொள்வதில்லை. புதிதாய் விசுவாசிகளாகி, இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி, அவருக்கு ஊழியம் செய்ய முன் வருபவர்களை மட்டும் கர்த்தர் எனக்குத் தந்தார். "விசுவாச ஜெப கைப்பிரதி ஊழியம்" என்ற ஸ்தாபனத்தை நடத்தி வந்த Rev. சாமுவேல் டேனியல் என்பவர் வெளியிட்ட சுவிசேஷ கைப்பிரதிகள் மற்றும் சிறு புத்தகங்களைப் பலருக்கும் விநியோகிக்க என் நண்பர்களுக்குப் பயிற்சி கொடுத்தேன். மேலும் எனது நண்பர்கள் பாடவும், சாட்சியளிக்கவும், பிரசங்கிக்கவும், புதிய ஆத்துமாக்களைச் சந்திக்கவும் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தேன். இவ்வாறு நான் கர்த்தருக்காக எப்போதும் பணி செய்பவனாக சுறுசுறுப்புடன் வாழ ஆரம்பித்தேன். என்னுடைய ஆத்தும வளர்ச்சிக்காகவும், எந்த வழியிலாவது, எத்தகைய செலவு செய்தாவது, உலகிலுள்ள பல தேசத்து மக்கள் மற்றும் சுவிசேஷம் செல்லாத பகுதியிலுள்ள மக்கள், கர்த்தரை அறிந்து கொள்ள வேண்டும் என்ற எனது பாரத்திற்காகவும் மேலும் அதிகமாக ஜெபிக்கத் தொடங்கினேன். . . . **பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.** 1 கொரிந்தியர் 9:22.



*Rev.* சாமுவேல் டேனியல்

1973–ஆம் ஆண்டில் ஒருநாள், "என்னால் முடிந்தது!" (The Best I Can!) என்ற தலைப்பிலுள்ள கைப்பிரதியை சென்னை அண்ணா சாலையில் உள்ள E.L.S. (Evangelical Literature Shop) புத்தகச்சாலையின் அருகில், அந்தப் புத்தகச் சாலையின் மேற்பார்வையாளரான, எனது நண்பரான சகோ. J.R. ஜெயபாலன் அவர்களுடைய உதவியோடு நான் விநியோகித்துக் கொண்டிருக்கும்போது, Rev. Dr. அகஸ்டின் பீட்டர்ஸ் என்ற மிகப் பெரிய ஊழியர்களில் ஒருவரான வரைச் சந்தித்தேன். அந்த பரபரப்பான சாலையில் நின்றபடியே, அவர் என் தலையில் கைகளை வைத்து இவ்வாறு தீர்க்கதரிசனம் உரைத்தார்:



*Rev. Dr.* **அகஸ்டின் பீட்டர்ஸ் & போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

"இங்கே ஒரு பையன் – சுவிசேஷத்திற்காக ஒரு மிகப்பெரிய ஊழியத்தைச் செய்ய என்னால் நியமிக்கப்பட்டுள்ளான். நான் அவனை அழைத்துள்ளேன். நான் அவனுக்கு மிகவும் விசேஷமான வரங்களையும், சுகத்தையும், செல்வத்தையும், மக்களையும் கொடுப்பேன். அவன் எனக்கு உண்மையுள்ள ஊழியனாகவும், மகனாகவும் இருப்பான். அவன்மேல் என் ஆசீர்வாதத்தை ஊற்றுவேன்."

சில நாட்கள் கழித்து, சகோ. C. N. ராஜன் (Photographer) என்ற புகைப்படம் எடுக்கும் என் நண்பர் மூலம் என்னை அழைத்து, சுவிசேஷ ஊழியனாக என்னை அபிஷேகித்தார். அதே பெலன், தரிசனம், நிலையான தன்மை இன்றும் அதாவது 50 ஆண்டுகளுக்குப் பின்னரும் என் வாழ்வில் இருக்கிறது என்று கூறுவது பொருத்தமானது. அந்த ஊழியர் மூலம் உரைக்கப்பட்ட எல்லா வார்த்தைகளும் நிறைவேறியுள்ளன. இதற்காக நான் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். ***

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

**நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்; பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று.** ஏசாயா 58:13,14.

எல்லாருக்கும் உயர்ந்த இடம் தேவை, உயர்வு தேவை. அது எப்படி கிடைக்கிறது? கர்த்தருடைய நாளிலே தனக்கு இஷ்டமானதைச் செய்யாமல், தன் காலை விலக்கி, தன் வழிகளின்படி நடக்காமல், தங்கள் சொந்தப் பேச்சைப் பேசாமலிருந்து இந்த நாள் மனமகிழ்ச்சியின் நாள், இந்த நாள் நல்ல நாள், இந்த நாள் சந்தோஷத்தின் நாள், கொண்டாட்டத்தின் நாள், இது ஆண்டவருடைய நாள் என்று சொல்லி கர்த்தருக்கு மகிமையான நாளாக எண்ண வேண்டும். கர்த்தருடைய நாளிலே தொலைக்காட்சியில் வருகிற எந்த நிகழ்ச்சி களையும் பாராமல் தொலைக்காட்சியின் சுவிட்சை நிறுத்தக்கூடுமானால் – ஆலயத்தில் நடக்கிற ஆராதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆலய ஆராதனையில் வந்து ஆண்டவரை ஆராதிப்பதுதான் இந்நாளில் கடமையென்று நினைத்து, இந்த நாளை மகிமையின் நாளென்று நீங்கள் ஒதுக்கி வைக்கக்கூடுமானால் – நீங்கள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பீர்கள்.

ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனை முடிந்தவுடனே சொந்தக் காரியங்கள், சொந்தத் திட்டங்கள், இவற்றைத் திட்டமிட்டு வைத்துவிட்டு சொந்தக் காரியங்களுக்காக இந்த நாளைப் பயன்படுத்தினால், நம்முடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியுண்டாகாது. வாழ்க்கையில் உயர்வுண்டாகாது. நீங்கள் இந்த நாளை கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுக்க வேண்டும். இந்த நாளிலே உங்கள் சொந்த வேலைகளைச் செய்யக்கூடாது என்று சொன்னால், செய்யக்கூடாதுதான். ஆலயத்திலிருந்து வீட்டிற்குப் போனவுடனே தொலைக்காட்சியைப் பார்த்துவிட்டு ஐயோ, முதலிலிருந்துப் பார்க்கமுடியவில்லையே. பரவாயில்லை. தொடர்ச்சியையாவது பார்க்கலாமா என்று நினைத்து இந்த உலகத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்போமானால் வாழ்க்கையில் உயர்வுண்டாகாது.

நீங்கள் கர்த்தருடைய நாளை மனமகிழ்ச்சியின் நாளாக நினைத்து கர்த்தருக்காக ஒதுக்கிவைக்கக்கூடுமானால், உங்களுக்கு மகிழ்ச்சியுண்டாகும். பூமியின் உயர்ந்த ஸ்தானத்தில் ஆண்டவர் உங்களை உட்கார வைப்பார். அன்பானவர்களே, உங்கள் வாழ்க்கையிலே ஒரு பொருளாதாரக் குறைவு, அல்லது சுகாதாரக் குறைவு, ஆவிக்குரிய தாழ்ச்சி அல்லது ஏதோ மற்றவர்களுக்கு இருக்கின்ற ஒன்று உங்களுக்கு இல்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டு "ஏன் ஆண்டவரே?" என்று நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பீர்கள் என்றால் பரிசுத்த ஆவியானவர் உங்களிடத்திலே மிகத்துல்லியமாகப் பேசுகிறார். "நீங்கள் என்னுடைய நாளை மகிமையின் நாளென்று கருதுவீர்களானால் நீங்கள் மகிழ்ச்சியாயிருப்பீர்கள்".

## 5. பொருளாதார ஆசீர்வாதங்கள்!

**"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள்" என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்** (மல்கியா 3:10).

'வருமானத்தில் பத்தில் ஒரு பங்கைக் கர்த்தருக்குக் கொடுத்தால், நல்ல காலம் வந்துவிடுமா?' என்று சிலர் கேட்பார்கள். உங்களுடைய வருமானத்தின் எல்லா வற்றிலேயும் பத்தில் ஒன்று கர்த்தருக்குச் சொந்தமானது. கடன் வாங்கிய பணத்தில் தசமபாகம் கொடுக்கக்கூடாது. நீங்கள் சம்பாதிக்கிற உங்கள் பணத்தில் – உங்கள் வருமானத்தில் – பத்தில் ஒன்று கர்த்தருக்குச் சொந்தமானது. கர்த்தருக்குச் சொந்தமான அந்தத் தசமபாகத்தை நீங்கள் எங்கேக் கொடுக்க வேண்டும்? உங்கள் தசமபாகத்தை எல்லாம் தேவனுடைய சபையிலுள்ள பண்டசாலையில் கொண்டுவாருங்கள். உங்களுடைய தசமபாகம், தேவனுடையச் சபைக்குச் சொந்தமானது. சுவிசேஷப் பணிக்காகவோ, பத்திரிகை ஊழியத்திற்காகவோ, மிஷனரிப் பணிக்காகவோ ஆங்காங்குச் சென்று முகாம்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துகிறார்களே, அவர்களுக்கோ உங்கள் தசமபாகம் பயன்படுத்தப்படக்கூடாது. அது முற்றிலும் நீங்கள் அங்கத்துவம் வகிக்கும் சபைக்குச் சொந்தமானது.

சபையானது சபையின் மூலம் செய்யப்படும் ஊழியங்களுக்கும், சபையில் உள்ள ஏழை எளிய மக்களுக்கும் இப்பணத்தைச் செலவு செய்ய வேண்டும். ஆனால் உண்மையாகவே தேவனுடைய பணத்தை தேவனுக்காகவே செலவு செய்கிற சபையைக் கண்டுபிடித்து அதில் அங்கத்துவம் வகிப்பது உங்கள் தலையாயக் கடமை. தசமபாகம் உங்கள் சபைக்குச் சொந்தமானது. உங்கள் வருமானத்திலே பத்தில் ஒன்றை உங்கள் சபையிலுள்ள பண்டசாலையில் கொண்டு வாருங்கள் என்று வேதம் சொல்லுகிறது. தசமபாகத்தைப் பிரித்து செலவு செய்ய விசுவாசிக்கு அதிகாரம் கிடையாது. தசமபாகத்தைப் பிரித்து அங்கே ஒருவருக்கு, இங்கே ஒருவருக்கு என்று சொல்லி தசமபாகத்தில் கை வைப்பதற்கு எந்த விசுவாசிக்கும் அதிகாரம் கிடையாது.

உங்கள் தசமபாகத்தையெல்லாம் ஆலயத்தின் பண்டசாலைக்குக் கொண்டு வாருங்கள். அப்பொழுது வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமல் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோ என்று சொல்லி என்னைச் சோதித்துப்பாருங்கள் என்று ஆண்டவர் சொல்கிறார். வேதவசனங்களிலிருந்து ஒரு வார்த்தையைக்கூட நாம் மாற்றக் கூடாது. தசமபாகம் கொடுத்ததினாலே ஆசீர்வதிக்கப்பட்டவன் நான். சில நேரங்களிலே கொஞ்சம் சம்பளம் வந்தால், தசமபாகத்தைக் கொடுத்து விடுவோம். ஆனால் நமக்கு வருமானம் பெருகும்போது, தசமபாகத்தைக் கொடுக்கக் கொஞ்சம் சிரமம் கொள்வோம். 100 ரூபாய் வந்தால் 10 ரூபாய் கொடுத்து விடலாம். 1000 ரூபாய் வந்தால் 100 ரூபாய் கொடுத்துவிடலாம். ஆனால் 10,000 ரூபாய் வந்தால் 1000 ரூபாய் காணிக்கை கொடுப்பது கொஞ்சம் கடினமான காரியமாகத் தோன்றும். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்க

### முக்கிய அறிவிப்பு

**பிரதிநிதிகள் தேவை!**

அண்மைக்காலமாக **அழைப்பின் எதிரொலியின்** சிங்களம், நேபாளி, உருது மற்றும் ஆப்பிரிக்கன் மொழிகளில் உள்ள வாசகர்களின் எண்ணிக்கை, வயதான நண்பர்களின் இழப்பு மற்றும் நண்பர்களின் இடமாற்றம் காரணமாக கணிசமாகக் குறைந்து வருவதை நாங்கள் காண்கிறோம். தற்போதுள்ள வாசகர்களிடமிருந்து ஈடுபாடும் குறைந்திருக்கிறது. வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வழிகள் குறித்து ஆலோசித்து வருகிறோம்.

பத்திரிகையை தொடர்ந்து நடத்த நமது முயற்சியின் முதல்படியாக சிங்களம், நேபாளி, உருது மற்றும் ஆப்பிரிக்கன் மொழிகளில் உள்ள வாசகர்களிடமிருந்து கீழ்க்கண்ட உதவிகளை எதிர்பார்க்கிறோம்.

(அ) உங்களுடைய மொழியில் வெளிவரும் பத்திரிகைகளை இலவசமாய் பெற, புதிய வாசகர்களை சேர்த்து அவர்களின் முகவரிகளை அனுப்பி உதவுங்கள்.

(ஆ) உங்களுடைய சொந்த இடங்களிலேயே **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையின் நகல்களை எடுத்து உங்களின் அன்பானவர்களுக்கு அனுப்புங்கள்.

(இ) உறவினர் மற்றும் நண்பர்களின் புதிய முகவரிகளை அனுப்பக்கூடிய மற்றும் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைப் பிரதிகளை எங்களிடமிருந்து இலவசமாகப்பெற்று ஊக்கமுடன் விநியோகிக்கக் கூடிய பிரதிநிதிகளாக ஊழியம் செய்து உதவி செய்யுங்கள்.

இது குறித்த கருத்துக்களையும் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

– ஆசிரியர் குழு

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

ஆசீர்வதிக்க, நம்முடைய தசமபாகத்திலே நாம் உண்மையுள்ளவர்களாயிருக்கும்போது ஆண்டவர் நம்மை அதிகமாக ஆசீர்வதிப்பார். நீங்கள் எந்த ஆலயத்திலே நாட்டப்பட்டிருக்கிறீர்களோ, அந்த ஆலயத்திற்கு நீங்கள் தசமபாகம் கொடுக்கும் போது ஆண்டவர் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடம் கொள்ளாமற்போகுமட்டும் உங்களை ஆசீர்வதிப்பார். இது மிகப்பெரிய இரகசியம். இதற்குமேல், உங்கள் காணிக்கைகளால் நீங்கள் விரும்பும் ஊழியங்களைத் தாங்கலாம். அநேகருக்குத் தெரியாது. நீங்கள் அனுபவித்துப் பாருங்கள். வெற்றி உங்களுடையதாகும்!

************

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : | **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

# அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❋ வருட சந்தா ரூ. 100/– ❋ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/21-23
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 28th JANUARY 2023
If un-delivered please return to:
ECHO OF HIS CALL (TAMIL)
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**